பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
06 07 2024 7 15
சனிக்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் இம்மாதம் 22-ஆம் தேதி தொடங்குகிறது. மத்திய பட்ஜெட் 23-ஆம் தேதி தாக்கல் செய்யப்படுகிறது.
2. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு நான்கு நாள் பயணமாக இன்று மாலை ஒடிஸா தலைநகர் புவனேஸ்வர் சென்றடைந்தார்.
3. இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட பன்நோக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் அடுத்த ஐந்து ஆண்டுகளில் அமைக்கப்படும் என்று மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.
4. பிரிட்டனுடன் இணைந்து மேற்கொள்ளும் அனைத்து கூட்டு முயற்சிகளையும் இந்தியா முழு ஈடுபாட்டுடன் செயல்படுத்தும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் அப்போது தெரிவித்தார்.
5. ஆசிய ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் ஆடவர் இரட்டையர் மற்றும் கலப்பு இரட்டையர் பிரிவுகளில் இந்திய வீரர்கள் இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

<u>இனி விரிவான செய்திகள் ----</u>

**[]><<>><[]**

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் இம்மாதம் 22-ஆம் தேதி தொடங்குகிறது.

இந்த தகவலை தெரிவித்துள்ள நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு ஆகஸ்ட் 12-ஆம் தேதி வரை இக்கூட்டத்தொடர் நடைபெறும் என்று கூறியுள்ளார்.

நடப்பு ஆண்டுக்கான பட்ஜெட் 23-ஆம் தேதி மக்களவையில் தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தேர்தலுக்குப் பின் புதிய அரசு அமைந்த பிறகு தாக்கல் செய்யப்படும் முதல் மத்திய பட்ஜெட் இது என்பது குறிப்பிடத்தக்கது.

**[]><<>><[]**

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு நான்கு நாள் பயணமாக இன்று மாலை ஒடிஸா தலைநகர் புவனேஸ்வர் சென்றடைந்தார்.

விமான நிலையத்தில் அம்மாநில ஆளுநர் திரு ரகுபர்தாஸ், முதலமைச்சர் திரு மோகன் சரண் மாஜி உள்ளிட்டோர் அவரை வரவேற்றனர்.

தமது சொந்த மாநிலத்திற்கு வருகை தந்துள்ள குடியரசுத் தலைவர், நாளை பூரி ஸ்ரீஜெகநாதர் ஆலயத்தில் நடைபெறும் ரத யாத்திரையை பார்வையிடுகிறார்.

**[]><<>><[]**

2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்கும் முயற்சியில் விண்வெளி தொழில்நுட்ப விஞ்ஞானிகளின் பங்கு மகத்தானது என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் கூறியுள்ளார்.

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் உள்ள இந்திய விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் 12-வது பட்டமளிப்பு விழாவில் மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி அவர் உரையாற்றினார்.

விண்வெளித்துறையில் இந்தியா பல்வேறு சாதனைகளைப் படைத்துள்ளதாக அவர் கூறினார்.

சந்திரனின் மேற்பரப்பை ஆய்வு செய்த சந்திரயான்-மூன்று பயணத் திட்டம், ஆதித்யா-எல்-ஒன்று விண்கலம் போன்றவை இந்தியாவின் விண்வெளி திட்டத்திற்கு மைல் கல்லாக அமைந்துள்ளன என்று தெரிவித்தார்.

இஸ்ரோ அனுப்பிய ஐந்து உள்நாட்டு செயற்கைக் கோள்கள் மற்றும் 46 வெளிநாட்டு செயற்கைக் கோள்கள் திட்டமிட்டப்படி சுற்றுப் பாதையில் நிலை நிறுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

நிலவின் தென்துருவத்தில் சந்திரயான் விண்கலத்தை வெற்றிகரமாக தரையிறக்கிய உலகின் முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளதையும் குடியரசு துணைத்தலைவர் சுட்டிக்காட்டினார்.

விண்வெளித்துறையில் மாணவர்கள் மேலும் பல சாதனைகளை படைக்க வேண்டுமென்றும் திரு ஜக்தீப் தன்கர் கேட்டுக் கொண்டார்.

**[]><<>><[]**

அடுத்த ஐந்து ஆண்டுகளில் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட கிராம பஞ்சாயத்துக்களில் பன்நோக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் அமைக்கப்படும் என்று மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் காந்திநகரில் 102-வது சர்வதேச கூட்டுறவு தின விழாவில் பேசிய அமைச்சர், அனைத்து பன்நோக்கு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களும் கூட்டுறவுத்துறை கட்டமைப்புக்குள் கொண்டுவரப்படும் என்று தெரிவித்தார்.

கூட்டுறவு வங்கிகளுக்கு இடையே பொருளாதார ஒத்துழைப்பு வலுவாக இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய திரு அமித்ஷா, மாவட்ட, மாநில கூட்டுறவு சங்கங்களுக்கு இடையேயான அனைத்து பண பரிவர்த்தனைகளும் கூட்டுறவு வங்கிகள் மூலமாக நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டுமென்று கூறினார்.

நாட்டில் உள்ள கூட்டுறவு கட்டமைப்புகளுக்கு அதிகாரம் அளிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்து வருவதாகக் கூறிய அவர், கூட்டறவு கட்டமைப்புகளை விரிவாக்கம் செய்வதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

குஜராத் மாநிலத்தில் கூட்டுறவு துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பல திட்டங்களுக்கு திரு அமித்ஷா பாராட்டு தெரிவித்தார்.

நானோ யூரியாவை விவசாயிகள் வாங்குவதற்கு மாநில அரசு சார்பில் சிறப்பு உதவித் திட்டம் உள்ளிட்டவை மிகுந்த பயனளிக்கக்கூடியவை என்று அவர் கூறினார்.

அமுல் நிறுவனத்தின் முதல் இயற்கை வேளாண் பொருள் அங்காடியையும் அமைச்சர் திரு அமித்ஷா திறந்து வைத்தார்.

**[]><<>><[]**

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர், பிரிட்டன் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு டேவிட் **Lammy**-யை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

ஒட்டுமொத்த கூட்டு முயற்சிகளை இணைந்து மேற்கொள்வதில் இந்தியா முழு ஒத்துழைப்பு அளிக்கும் என்று திரு ஜெய்சங்கர் அப்போது தெரிவித்தார்.

திரு டேவிட் லாமியை விரைவில் சந்திப்பதை தாம் ஆவலோடு எதிர்நோக்குவதாகவும் திரு ஜெய்சங்கர் கூறினார்.

**[]><<>><[]**

மிசோராம் முதலமைச்சர் திரு **Lalduhoma** இன்று பிரதமர் திரு நரேந்திரமோடியை புதுதில்லியில் சந்தித்து பேசினார்.

அஸ்ஸாம் ரைபிள்ஸ் பிரிவை ஐய்ஸ்வால் நகரிலிருந்து அங்கிருந்த பத்து கிலோமீட்டர் தொலைவில் உள்ள மற்றொரு இடத்திற்கு மாற்றுவது குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர்.

அஸ்ஸாம் மாநிலத்தில் தொழில் முனைவோருக்கு நிதி ஆதாரங்களை வழங்குவதற்காக கொண்டுவரப்பட்டுள்ள **bana kaih** முன்னோடி திட்டம் குறித்தும் இந்த சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டது.

அரசு முகாம்களில் உள்ள பங்ளாதேஷ் அகதிகள் குறித்தும் மிசோராம் முதலமைச்சர் பிரதமரிடம் பேசினார்.

**[]><<>><[]**

தமிழகத்தில் பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத்தலைவர் ஆம்ஸ்ட்ராங் சென்னையில் நேற்று படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ஆம்ஸ்ட்ராங்கின் உடல் வைக்கப்பட்டுள்ள ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் மத்திய இணை அமைச்சர் திரு எல் முருகன் நேரில் அஞ்சலி செலுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமை சீர்கெட்டுள்ளதாகக் கூறினார்.

ஆம்ஸ்ட்ராங் கொலை சம்பவம் நிகழ்ந்ததற்கு மாநில அரசு முழு பொறுப்பேற்க வேண்டுமென்றும், இந்த வழக்கை சிபிஐ-யிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் திரு எல் முருகன் தெரிவித்தார்.

**[]><<>><[]**

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலை தொடர்பாக எட்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக சென்னை மாநகர காவல்துறை ஆணையர் திரு சந்தீப் ராய் ரத்தோர் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கொலைக்கான காரணம் குறித்து பல்வேறு கோணங்களிலும் காவல்துறையினர் விசாரணை நடத்தி வருவதாகக் கூறினார்.

இந்த வழக்கில் தொடர்புடைய மேலும் பல குற்றவாளிகளையும் கைது செய்து விசாரணை நடத்துவதற்கான முயற்சிகளை காவல்துறை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

**[]><<>><[]**

கழிவுநீர் தொட்டிக்குள் இறங்கி சுத்தம் செய்யும் பணியாளர்கள் உயிரிழப்பதை தடுக்க தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத்தின் தலைவர் திரு வெங்கடேசன் வலியுறுத்தியுள்ளார்.

ஈரோடு மாவட்டம் மரப்பாலத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கான அடுக்குமாடி குடியிருப்புப் பகுதியை ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநகராட்சி, நகராட்சி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு அவர்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தை முறையாக வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

ஒப்பந்த அடிப்படையில் அவர்களை பணியமர்த்தும் முறைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்றும் திரு வெங்கடேசன் கேட்டுக் கொண்டார்.

*( சவுண்ட்பைட் - வெங்கடேசன் ) -55-- செகண்ட்*

**[]><<>><[]**

மணிப்பூரில் இம்ப்பால் மேற்கு மாவட்டத்தில் மாநில அளவிலான 75-வது வன திருவிழா இன்று கொண்டாடப்பட்டது.

மாநில வன மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு பிஸ்வஜித் சிங் தலைமையில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டன.

வாழ்க்கையோடு இணைந்த சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

‘உங்கள் அருகில் உள்ள மரம் பற்றி தெரிந்து கொள்ளுங்கள்’ என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது.

**[]><<>><[]**

கஷ்மீர் பள்ளத்தாக்கில் அமைந்துள்ள குல்காம் மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே இன்று நண்பகல் முதல் துப்பாக்கி சண்டை நடைபெற்று வருகிறது.

பாதுகாப்புப் படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மத்திய காவல்படையினா் மற்றும் ஜம்மு-கஷ்மீா் காவல்துறையினா், ராணுவம் இணைந்து தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டபோது தீவிரவாதிகள் தாக்கியதாகவும், கூட்டு ராணுவப் படையினா் பதில் தாக்குதல் நடத்தி வருவதாகவும் காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

**[]><<>><[]**

ஆசிய ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் ஆடவா் இரட்டையா் மற்றும் கலப்பு இரட்டையா் பிரிவுகளில் இந்திய வீரா்கள் இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளனா்.

மலேசியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவா் இரட்டையா் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் அபய்சிங் - வேலவன் செந்தில்குமாா் இணை, ஜப்பானின் **Endo tomo taka – Naoki hayashi** இணையை 11-9, 11-2 என்ற செட் கணக்கில் வென்றது.

கலப்பு இரட்டையா் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் இந்தியாவின்

**Abhay Singh – Joshna Chinappa** இணை, ஹாங்காங்கின் **Cheng nga ching - Lai cheuk nam Mathew** இணையை 11-8, 11-10 என்ற செட் கணக்கில் வென்றது.

**[]><<>><[]**

ஜிம்பாப்வே அணிக்கு எதிரான முதலாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற 116 ரன் எடுக்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
ஹராரேயில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பந்து வீச தீர்மானித்தது.
இதையடுத்து முதலில் பேட் செய்த ஜிம்பாப்வே அணி ஒன்பது விக்கெட் இழப்புக்கு 115 ரன் எடுத்துள்ளது.
பின்னா் களமிறங்கிய இந்தியா 12 புள்ளி ஐந்து ஓவரில் ஏழு விக்கெட் இழப்புக்கு 66 ரன் எடுத்துள்ளது.

**[]><<>><[]**

கனடா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பிரியன்ஷு ரஜாவத் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-11, 17-21, 21-19 என்ற செட் கணக்கில், டென்மார்க்கின் **Anders Antonsen**-ஐ வென்றார்.

**[]><<>><[]**

தாய்லாந்தில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் போட்டியின் இறதி ஆட்டத்தில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி - தாய்லாந்தின் **Plipuech** இணை தோல்வியடைந்தது.

***End of News***